# கீழ்க்கண்ட வாக்கியங்களைச் சத்தமாகப் படித்துப் பழகவும்.

- மன்னர் மக்களைச் சந்தித்தார்.
- அம்மாவிடம் ஆறுதல் தேடினேன்.
- அமைதியான சூழ்நிலை நிலவியது.
- மாணவர்கள் சுற்றுலா செல்ல விரும்பினர்.
- மணியோசை ஒலித்ததால் சென்றனர்.
- நல்ல பழக்கவழக்கங்களை மேற்கொள்.
- ஆகாய விமானம் பறந்தது.
- பழங்கள் ஊட்டச்சத்து மிக்கவை.
- கழுதை பொதி சுமந்தது.
- மீன் நீரில் நீந்திச்சென்றது.
- மாலை முழுவதும் விளையாடினான்.
- படத்தைப் பார்த்து விடையளி.
- குமரன்  வீட்டுவேலை செய்தான்.
- தொடர்ச்சியாக மழை பொழிந்தது.
- வாக்கியம் அமைத்து விளையாடினர்.

# கீழ்க்கண்ட வாக்கியங்களைச் சத்தமாகப் படித்துப் பழகவும்.

- மலைத்தொடர் நீண்டுகொண்டே சென்றது.
- சூரியன் அதிகவெப்பம் உடையது.
- நிலா இரவில் தெரியும்.
- போட்டித்தேர்வில் வெற்றி பெற்றான்.
- காலை எழுந்தவுடன் படித்தான்.
- தொடர்வண்டி மெதுவாகக் கிளம்பியது.
- மருத்துவர் அறிவுரை கூறினார்.
- உடல்நிலை சரியில்லாததால் வரவில்லை.
- கல்விச்சுற்றுலா சென்று வந்தேன்.
- ஆசிரியர் கட்டளை பிறப்பித்தார்.
- தாவரம் பசுமையாக இருந்தது.
- மரம் வேகமாக வளர்ந்தது.
- கொடி சுவற்றில் படர்ந்தது.
- காலை உணவைத்  தவிர்த்தல் கூடாது.
- ஆசிரியர் மாணவர்களிடம் வினா எழுப்பினார்.